டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 4.04.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 237 - Madurai | Online Edition

# நாடு தழுவிய எரிபொருள் விநியோக நிலவரம் குறித்து, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகச் செயலாளர் ஆய்வு

புது தில்லி, ஏப்.3

நாடு தழுவிய எரிபொருள் விநியோக நிலைமை குறித்து, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் கூடுதல் தலைமைச் செயலாளர்கள் மற்றும் முதன்மைச் செயலாளர்களுடன் (உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல்) நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு பெட்ரோலியத் துறைச் செயலாளர் தலைமை தாங்கினார்.

அத்தியாவசிய பெட்ரோலிய எரிபொருட்களின் விநியோகத்தை எளிதாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அமைச் சகச் செயலாளர் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு விளக்கினார். மேலும், மாறிவரும் சூழ்நிலையைச் சமாளிக்க மத்திய அரசுடன் இணைந்து செயல்படுமாறு அந்தந்த மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களை அவர் பாராட்டினார்.

உள்நாட்டு நுகர்வோர் மற்றும் அத்தியாவசியத் துறைகளுக்குத் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதற்காக, மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் எல்பிஜி விநியோகத்தைத் தீவிரமாக நிர்வகித்து, அதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று செயலாளர் வலியுறுத்தினார்.

மேலும், தேவையற்ற பீதியைத் தூண்டக்கூடிய பதுக்கல், திசை திருப்பல் மற்றும் தவறான தகவல்களைப் பரப்புதல் போன்ற செயல்பாடுகளுக்கு எதிராகக் கடுமையான கண்காணிப்பை மேற்கொள்ளுமாறும் மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

உத்தரப்பிரதேசம், குஜராத், ஹரியானா, தில்லி, மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள், முறைகேடு களைக் கட்டுப்படுத்துவதற்கான சோதனைகள் உள்ளிட்ட

அமலாக்க நடவடிக்கைகளுக்காகப் பாராட்டப்பட்டன. மற்ற மாநிலங்கள், கண்காணிப்பு மற்றும் அமலாக்கத்தை மேலும் வலுப்படுத்தவும், குற்றவாளிகள் மீது முன்மாதிரியான நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தப்பட்டன. விநியோகங்கள் தொடர்பாக மக்களைத் தவறாக வழிநடத்தவும், பொய் வதந்தி களைப் பரப்பவும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளைத் தீவிரமாக முறியடிக்குமாறும் மாநிலங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான தடையில்லா வர்த்தக (எஃப்டிஎல்) எல்பிஜி விநியோகம் தொடர்பான அறிக்கைகள் குறித்து, புலம்பெயர்ந்த தொழிலாளர்களைப் பாதிக்கும் வகையில் எல்பிஜி விநியோகத்தில் எந்த இடையூறும் இல்லை என்றும், விநியோகம் சீராக உள்ளது என்றும் மாநிலங்கள் தெளிவுபடுத்தின. உள்ளூர் தேவைகளின் அடிப்படையில், எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களுடன் இணைந்து 5 கிலோ எஃப்டிஎல் எல்பிஜி சிலிண்டர்களின் இலக்கு விநியோகத்தை மாநிலங்கள் பரிசீலிக்கலாம் என்று செயலாளர் தெரிவித்தார்.

வாகனங்களுக்கான எல்பிஜி தேவையைப் பூர்த்தி செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும், எல்பிஜி மற்றும் பெட்ரோல் ஆகிய இரண்டிலும் இயங்கக்கூடிய வாகனங்கள் பெட்ரோலைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டது.

அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் ஒத்துழைப்பைப் பாராட்டிய பெட்ரோலியத் துறைச் செயலாளர், விநியோக நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும், பொது மக்களின் நம்பிக்கையைத் தக்கவைப்பதற்கும் தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வரத்து அதிகரிப்பால் முருங்கை விலை கடும் சரிவு

கிருஷ்ணகிரி, ஏப்.3

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியில் விளைச்சல் அதிகரிப்பால் முருங்கைக்காய் விலை சரிந்து கிலோ ரூ.40க்கு விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.



கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் முருங்கைக்காய் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு விளையும் முருங்கைக்காய்களை உள்ளூர் சந்தைகளில், விவசாயிகளிடம் இருந்து வாங்கி, வியாபாரிகள் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வருகின்றனர்.

முருங்கைக்காய் விளைச்சல் அதிகரித்துள்ளதால், வியா பாரிகள் யாரும் வாங்க முன்வரவில்லை. இதனால் காய்கறிகள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு முருங்கைக்காய்களை வியா பாரிகள் இலவசமாக வழங்கி வருகின்றனர்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், கடந்த காலங்களில் முருங்கை விளைச்சல் கடுமையாக பாதித்ததால், விலை அதிகரித்து கிலோ ரூ.300க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது முருங்கை விளைச்சல் அதிகரித்ததால், 10 கிலோ அறுவடை செய்யப்பட்ட மரத்தில், 50 கிலோ வரை விளைச்சல் கிடைத்தது. இதனால் முருங்கைகாயை வாங்க வியாபாரிகள் முன் வராமல், நாங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்கள், அருகில் உள்ளவர்களுக்கு வழங்கி வருகிறோம், என்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

*நேற்றைய தொடர்ச்சி...*

**அவல் (Poha / Flattened Rice)**

அவல் என்பது தமிழ்நாட்டின் பாரம்பரிய உணவு மூலப் பொருட்களில் ஒன்றாகும். நெல்லை மெல்லியதாக தட்டி தயாரிக்கப்படும் இந்த உணவுப்பொருள் நூறாண்டுகளாக தமிழர்களின் அன்றாட உணவின் பகுதியாக விளங்கி வருகிறது.

இன்றைய நவீன வாழ்க்கை முறையில் நேர சேமிப்பு மிக முக்கியம்.

அடுப்பில்லா சமையல் என்ற கருத்தாக்கம் இளைய தலைமுறைக்கும், வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும், மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைகிறது.

அவல் ஒரு சிறந்த அடுப்பில்லா சமையல் பொருளாக விளங்குகிறது. ஏனெனில் வெறும் ஊறவைப்பு மட்டுமே போதும்!

**அவலின் ஊட்டச்சத்து விவரம் (Nutritional Profile)**

100 கிராம் அவலில் கிட்டத்தட்ட 347 கிலோ கலோரி ஆற்றல் இருக்கிறது. கீழே உள்ள அட்டவணை முக்கிய சத்துக்களை காட்டுகிறது :

**ஊட்டச்சத்து அளவு (100g) முக்கிய பலன்**

கார்போஹைட்ரேட் 77.3g / 100g உடனடி ஆற்றல் தரும்

புரதம் 6.6g / 100g தசை வளர்ச்சி உதவும்

இரும்புச்சத்து 20mg / 100g இரத்த சோகை தடுக்கும்

கால்சியம் 20mg / 100g எலும்பு வலிமை

நார்ச்சத்து 0.9g / 100g செரிமான ஆரோக்கியம்

கொழுப்பு 0.6g / 100g மிகக் குறைவு - இதய நலம்

சோடியம் 28mg / 100g இரத்த அழுத்தம் கட்டுப்பாடு

மக்னீசியம் 25mg / 100g நரம்பு, தசை செயல்பாடு

## உணவு வகைகள் - விரிவான பதிவு

### 1. அவல் தயிர் சாதம்

**தேவையான பொருட்கள் :**

- மெல்லிய அவல் - 1 கப்
- தயிர் - 1¼ கப்
- கறிவேப்பிலை - சிறிதளவு
- பச்சை மிளகாய் - 1 (நறுக்கியது)
- இஞ்சி துருவல் - ½ தேக்கரண்டி
- உப்பு - தேவைக்கேற்ப
- கடுகு - ½ தேக்கரண்டி (விரும்பினால்)
- மாதுளை / திராட்சை - அலங்காரத்திற்கு

**செயல்முறை :**

- அவலை சுத்தமான தண்ணீரில் 5-7 நிமிடம் ஊற வையுங்கள்.
- ஊறிய அவலை வடிகட்டி, தண்ணீர் நீக்கவும்.
- தயிரில் உப்பு, இஞ்சி, பச்சை மிளகாய் சேர்த்து நன்கு கலக்கவும்.
- ஊறிய அவலை தயிர் கலவையில் சேர்த்து மெதுவாக கலக்கவும்.
- கறிவேப்பிலை, மாதுளை சேர்த்து உடனே பரிமாறவும்.
- குளிரூட்டினால் மேலும் சுவையாக இருக்கும்.

**ஆரோக்கிய நன்மைகள் :**

✓ புரதம் + கார்போஹைட்ரேட் சேர்க்கை - சீரான ஆற்றல்
✓ தயிரிலுள்ள புரோபயாட்டிக்குகள் - குடல் ஆரோக்கியம்
✓ இரும்புச்சத்து (அவல்) + கால்சியம் (தயிர்) - எலும்பு வலிமை
✓ கோடை வெப்பத்தில் உடலைக் குளிர்விக்கும்

**எச்சரிக்கை :**

- நீரிழிவு நோயாளிகள் தயிரின் அளவை கட்டுப்படுத்தவும்
- தயிர் அலர்ஜி உள்ளவர்கள் தவிர்க்கவும்
- தயாரித்தவுடன் உண்ணவும் - நீண்ட நேரம் வைக்க வேண்டாம்

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**

# வெயில் அதிகரிப்பால் இளநீர் விற்பனை அமோகம்



கரூர், ஏப்.3

கடந்த இரண்டு மாதங்களாக கோடை வெயில் தமிழகம் முழுதும் உச்சத்தில் உள்ளது. சுட்டெரிக்கும் வெயிலை சமாளிக்கும் வகையில், பொதுமக்கள், குளிர்பான கடைகளில் முகாமிட்டு, வெப்பத்தை சமாளித்து வருகின்றனர். இதே போல், கரூர் மாநகரின் பல்வேறு பகுதிகளில் இளநீர் விற்பனையும் அதிகரித்துள்ளது. வழக்கமாக விற்பனை செய்யப் படும் இடங்களைத் தவிர, கூடுதலாக பல்வேறு பகுதிகளிலும் வியாபாரிகளால் இளநீர் விற்பனை நடத்தப்பட்டு வருகிறது.

கோவை மாவட்ட பகுதிகளில் இருந்து இளநீர் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கோடையை சமாளிக்கும் திறன் கொண்ட இயற்கை பானமாக கருதப்படும் இளநீரை பொதுமக்களும் ஆர்வத்துடன் வாங்கி பருகி வருகின் றனர் என்பதால், கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதி களில் இளநீர் விற்பனை தற்போது அதிகரிக்க துவங்கியுள்ளது.



# நவீன வேளாண்மையில் உதட்டுச் சாய மரம் [LipStick] மரத்தின் பயன்கள்

வளர்ந்து வரும் நாடுகளில் ஏறத்தாழ 350 மில்லியன் மக்கள் சிறு வனப் பொருட்களை அவர்களது வருமானத்திற்காக நம்பியுள்ளனர். இந்தியாவில் அதாவது 275 மக்கள் மில்லியன் ஏழை 27 சதவிகிதம் மக்கள் சிறு வனப்பொருட்களை அவர் களின் வாழ்வாதாரத் தேவைக்காக நம்பியுள்ளனர்.




சிறு வனப்பொருட்களைச் சேகரம் செய்வதன் மூலம் 10 மில்லியன் வேலை நாட்களை முடிகிறது. சிறு வனப்தாசாயம் உருவாக்கித் பொருட்களில் முக்கியமான ஒன்று பிரித்தெடுத்தல் ஆகும். சாயம் பிரித்து எடுத்தலில் பிக்ஸா ஓரல்லானா மரம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இந்தியர்கள் இயற்கை முறையில் பெறப்படும் சாயத்தைப் பயன்படுத்துவதில் உலகின் முன்னோடியாக இருந்து வருகின்றனர். 'பிக்ஸின்' என்ற ஆரஞ்சு நிறமி பிக்ஸா ஓரல்லானா (Bixa Orellana) என்ற மரத்திலிருந்து பிரித்தெடுக்கப் படுகிறது. இது பெருமளவில் இயற்கை சாயமாகப் பயன்படு கிறது. இதனை உதட்டுச் சாய மரம் (அ) ரோகான் (அ) அனட்டோ என்றழைப்பர். இது பிக்ஸேஸியே (Bixaceae) குடும்பத்தைச் சார்ந்தது. இம்மரம் மத்திய மற்றும் தென்அமெரிக்காவைத் தாயமாகக் கொண்டது. 3 – 4 மீ. உயரம் வரை வளரும் தன்மை உடையது.

மேலும், ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவில் இயற்கை பரவலாகவும், மைசூர், கேரளம், கோரமண்டலக் கடற்கரை, ஆந்திரா, மஹாராஷ்டிரா, மேற்கு வங்கம் மற்றும் அஸ்ஸாம் ஆகிய இடங்களில் பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், மதுரை. திருநெல்வேலி மாவட்டங்களில் வளர்க்கப்படுகிறது. கடந்த 20 ஆண்டுகளாக நுகர்வோர் மத்தியில் உணவில் கலக்கப்படும் பொருட்களைப் பற்றிய விழிப்புணர்வு இருப்பதால், அவர்களின் உணவும் இயற்கையாகவே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

**மரத்தின் இயல்புகள்**

இம்மரத்தின் கிளைகள் தரைப்பக்கம் படர்ந்து குடை போல விரிந்து காணப்படும். இதன் இலைகள் வெற்றிலையின் இலை அமைப்பை ஒத்து இருக்கும். பூக்கள் கொத்தாகவும், சிவப்பு, வெள்ளை மற்றும் இளஞ்சிவப்பும் வெள்ளையும் கலந்து மூன்று விதமான நிறங்களில் காணப்படும்.

இதன் காய் சிவப்பு, பச்சை, பழுப்பு மற்றும் பச்சையும் சிவப்பும் கலந்தும் மற்றும் சிவப்பும் பழுப்பும் கலந்தும் பலவித வண்ணங்களில் காணப்படும்.

மேலும், இதன் காய்கள் தட்டையாகவும். உருண்டையாகவும், மேல் பகுதிகளில் முட்கள் போன்ற அமைப்பும் கொண்டிருக்கும்.

### தட்ப வெப்பம் மற்றும் மண்

இது வெப்பம், மிதவெப்ப மண்டலப் பகுதிகள் மற்றும் பனியில்லா இடங்களில் நன்கு வளரும் தன்மை உடையது. மேலும். 20 – 36 C வெப்பநிலை மற்றும் 1250 – 2000 மி.மீ. மழையளவு கொண்ட இடங்களில் நன்கு வளரும். காய் முதிர்வடையச் சற்று வறண்ட காலம் ஏற்றது.

### நாற்றுகள் உற்பத்திச் செய்யும் முறை

### விதை மூலம் இனப்பெருக்கம்

மண், மணல் மற்றும் மக்கியத் தொழு உரம் ஆகியவற்றைக் கலந்து நன்கு பதப்படுத்தப்பட்ட மேட்டுப்பாத்திகளைத் தயார் செய்தல் வேண்டும். தினமும் இரு முறை நீர்ப்பாய்ச்சி வருவதன் மூலம் 8–10 நாட்களில் நாற்றுக்கள் நன்கு வளரும். பொதுவாக, நாற்றுக்கள். 15 – 20 செ.மீ. உயரம் அடையும் பொழுது அவற்றைப் பிடுங்கி பாலித்தீன் பைகளில் நட வேண்டும். ஆறு மாத வயதுடைய நாற்றுகளை நடவு வயலில் 3 மீ. x 3 மீ. இடைவெளியில் பருவமழைத் தொடங்குவதற்கு முன்பே நடுதல் அவசியமாகும்.

### விதையில்லா இனப்பெருக்கம்

பிளவு ஒட்டு மற்றும் தண்டுக்குச்சி மூலம் விதையில்லா இனப்பெருக்கம் செய்யலாம். நவம்பர் டிசம்பர் மாதங்கள் இவ்வகை இனப்பெருக்கத்திற்கு உகந்தது. பொதுவாக, நடுத்தர வயதுடைய மரத்திலிருந்து 15 செ.மீ. நீளமும். 0.5 செ.மீ விட்டமும் கொண்ட தண்டுக் குச்சிகளைச் சேகரித்து. வேர் ஊக்கிக் கரைசலில் (IBA @ 4000 ppm) ஓர் இரவு முழுவதும் அடிப்பகுதியை ஊற வைத்து நடுவதன் மூலம் 85 சதவிகிதம் வரை வேர்களின் முளைப்புத்திறன் அதிகரிக்கும்.

### நடவு வயல் நிர்வகிக்கும் முறை

ஆறு மாதத் தரமான நாற்றுக்களை, ஜூன் செப்டம்பரில் நடவு வயலில் 30 x 30 x 30 செ.மீ. அளவுடைய குழிகளில், 3 மீ. x 3 மீ. இடைவெளியில் (ஓர் எக்டருக்கு 1100 நாற்றுகள்) நடலாம். 2 முறை நீர்ப்பாய்ச்சுதல் மாதத்திற்கு அவசியமாகும். களை எடுத்தல், ஈரப்பதமிருக்கப் பசுந்தாளிடுதல். குழியைச் சுற்றிப் பாத்திக் கட்டுதல் ஆகியவற்றின் மூலம் செய்தால் நல்ல விளைச்சல் பெறலாம். 3 ஆண்டிற்குள் 2 முறைகளை எடுக்க வேண்டும்.

### பருவ நிகழ்வுகள்

நடவு நட்ட 1½ முதல் 2 ஆண்டிலிருந்து பூக்கள் பூக்க ஆரம்பிக்கும். இனப்பெருக்க முறையில் விதையில்லா உருவாக்கிய நாற்றுக்கள் முதல் ஆண்டிலேயே பூக்கத் தொடங்கும். ஜுலை ஆகஸ்ட் மாதங்களில் பூக்கள் பூக்க ஆரம்பித்து அக்டோபரில் முடிவடையும்.

### விளைச்சல் மற்றும் பிக்ஸின் அளவு

காய்களில் வெடிப்பு ஏற்பட ஆரம்பித்தவுடன் விதைகளை அறுவடைச் செய்வது நல்லது. கொத்துக் கொத்தாக அறுவடைச் செய்து பாலித்தீன் தாள் (அ) துணிகளில் பரப்பி நிழலில் காய வைக்க வேண்டும். உலர்ந்தவுடன் காய்களைத் தட்டி உள்ளிருக்கும் விதைகளை எடுக்க வேண்டும். ஒரு மரத்தி லிருந்து 0.5 கிலோ வரை விதைகளைப் பெறலாம். இரண்டாம் ஆண்டு முடிவில் ஓர் எக்டருக்கு 300-550 கிலோ வரை அறுவடைச் செய்யலாம். பிரேசில் நாடு ஏறக்குறைய 3,000 - 10,000 டன் வரை விதைகளை ஏற்றுமதி செய்கிறது.

### கவாத்து முறை

இம்மரங்களைப் பராமரித்தலில் கவாத்துச் செய்தல் மிகவும் முக்கியமான நிகழ்வாகும். இவ்வாறு செய்வதன் மூலம் அதிக விளைச்சல் பெறலாம். தேவையற்ற கிளைகளை வெட்டுவதன் மூலம் அதிலிருந்து அதிக இளம்கிளைகள் வளரும். கிளைகளை வெட்டியவுடன் அந்த இடத்தில் சிறிது பூஞ்சாணக் கொல்லியைத் தடவுதல் வேண்டும்.

### பயன்கள்

மலச்சிக்கல் பிக்ஸின் மற்றும் ஆரல்லின் என்ற பிரித்தெடுக் கப்படுகிறது. கேரமல் (இளஞ்சிவப்பு இரண்டு சாய மேற்றி நிறமிகள் விதையிலிருந்து மற்றும் மஞ்சள் நிற சாயமேற்றி) நிறமிக்குப் பிறகு அனட்டோவானது உலகிலேயே இரண்டாவது சிறந்த சாய மேற்றியாகப் பயன்படுகிறது. அனட்டோசாயம் உணவுப் பொருட்களிலும், துணிகளுக்குச் சாயமேற்றவும், சோப்பு, வெண்ணெய், செயற்கை வண்ணம், உதட்டுச் சாயம் மற்றும் உடம்பில் வர்ணம் பூசவும் நிறமேற்றியாகப் பயன்படுகிறது.

தகவல் : *மா.கிருபா, உதவி பேராசிரியர், சந்தியூர், சேலம் மற்றும் T.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலைப்பேட்டை.*

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மும்மடங்கு வருமானம் தரும் மூலிகை பயிர் 'பூனைக்காலி சாகுபடி'





தற்போது மூலிகை பயிர் சாகுபடிக்கு அதிகளவு மார்க்கெட்டில் கிராக்கி ஏற்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த பூனைக் காலி பயிர் சாகுபடி குறிப்பாக மானாவாரியாக கரிசல் செம் மண்ணில் சாகுபடி செய்யலாம். அதுவும் மழைக் காலத்தில் விதைகளை விதைப்பதன் மூலமாக எளிதாக விளைந்து அதிக மகசூல் கொடுக்க கூடியது தான் இந்த பூனைக்காலி. இதனை ஆங்கிலத்தில் வெல்வெட் பீன்ஸ் (VEL-VET BEANS) என்றும் அழைக்கப்படுகிறது.

இது ஒரு வெப்ப மண்டல பயிராகும். இதில் கருப்பு, வெள்ளை நிற வகை விதைகள் என இரு வகைகள் உள்ளன. இது ஆயுர்வேத மருத்துவம் மற்றும் பாரம்பரிய மருத்துவத்திற்கு பயன்படுத்த ஆண்மை மற்றும் பாலியல் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண மருந்தாக பயன்படுத்தப்படுகிறது.

**பூனைக்காலி – அறிமுகம்?**

இதனை 'மூக்குனா ப்ரூரியன்ஸ்' (MUCUNA PRURIENS) என்ற அறிவியல் பெயரும் உண்டு. இது பேபேசியே குடும்பத்தை சார்ந்து இதனுடைய தாயகம் ஆப்பிரிக்கா மற்றும் இந்தியாவாக இருக்கலாம் என கருதப்படுகிறது.

அவரை போன்ற 15 மீட்டர் வரை உயரம் வளரக்கூடியது. 105 நாட்களில் அறுவடை செய்யலாம். முழுக்க முழுக்க இயற்கை பூச்சி விரட்டிகளை பயன்படுத்தி சாகுபடியை செய்ய வேண்டும்.

எக்காரணம் கொண்டு இரசாயனத்தை பயன்படுத்திடக் கூடாது, மருத்துவத்திற்கு பயன்படுத்துவதால்.

## பூனைக்காலி சாகுபடி முறைகள்

நிலத்தை நன்றாக உழுது கட்டிகள் இல்லாதவாறு பொல பொலப்பாக மண்ணை தயார் செய்ய வேண்டும். மக்கிய தொழுஉரம்/ஆட்டுகிடை பயன்படுத்திட வேண்டும். மண்ணின் கார அமில நிலை 6.5-7.5 வரை இருக்க வேண்டும். அதுவும் மழைக்காலங்களில் செப்.-அக்டோபர் மாதங்களில் மானா வாரியாக விதைக்கலாம். ஏக்கருக்கு அதிக பட்சமாக 15 கிலோ விதை தேவைப்படும் விதைகளை 3 அடி இடைவெளியில் ஒரு அங்குல ஆழத்தில் குழி பறித்து அதில் 2-3 விதைகளை ஊன்றலாம். நன்றாக முளைத்து வந்த பின் ஒரு செடியை விட்டு மற்றவற்றை களைக்கலாம்.

விதைத்த 6-8 நாட்களில் முளைப்பு தெரியும். விதைத்த 20 நாளில் 200 கிராம் மண்புழு உரத்தை (VERMICOMPOST) ஒவ்வொரு செடியின் தூர் பாகத்தில் வைக்க வேண்டும். விதைத்த பின் 25வது நாளில் களை எடுக்க வேண்டும். பின்னர் 10 லிட்டர் தண்ணீருக்கு 300 மி.லி மீன் அமினோ அமிலத்தை கலந்து தெளிக்க வேண்டும்.

விதைத்த 35 நாளில் 10 லிட்டர் தண்ணீர்/500மி.லி எருக்கு இலை கரைசல் கலந்து தெளிக்க வேண்டும். விதைத்த 45 நாள் 10 லிட்டர் தண்ணீருக்கு 300 மி.லி இ.எம் கரைசல் என்ற அளவில் தெளிக்க வேண்டும். இந்த சமயத்தில் செடிகள் வேகமாக படரும் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதலை கட்டுபடுத்த இஞ்சி, மிளகாய் பூண்டு கரைசல் தெளிக்கலாம்.

விதைத்த 60 நாளில் பூ பூத்து 70வது நாளுக்கு மேல் பிஞ்சு பிடிக்கும். விதைத்த 90 நாளைக்கு மேல் காய்க்க தொடங்கும். 105 நாளைக்கு காய் முற்றி நெற்றுகளாக மாறும். (ஒரு காயில் சுமாராக 7 விதைகள் இருக்கும்) நன்றாக முதிர்ச்சி அடைந்த பின்பு தான் அறுவடை செய்ய வேண்டும். காய்களின் மேல் மிருதுவான வெல்வெட் போன்ற பால் தன்மையுள்ள சுனை இருக்கும்.

## அறுவடை

நன்றாக முற்றிய நெற்றுகளை அறுவடை செய்ய வேண்டும். வெயிலில் நன்றாக காய வைத்தால் அது தானாகவே வெடித்து சிதறும். விதைகள் உதிர்ந்து விடும். இரண்டு ஆண்டுகளாக வரை இருப்பு வைக்கலாம்.

**பூனைக்காலின் மருத்துவ பயன்கள்**

இதில் (L-DOPA) லெவோ டோபா) என்ற சத்துகள் உள்ளன. இது மூளையில் உள்ள நரம்பியக் கடத்தியான டோபமைசின் முன்னோடியாகும்.

இது பொதுவாக பார்கின் சன் நோய்க்கான சிகிச்சையில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் ஆயுர்வேத மருத்துவத்தில் முக்கிய பங்காற்றுகிறது.

தற்போது 1 கிலோ 200/வரை விற்பனை செய்யப்படுகிறது. நாட்டு மருந்து கடைகளில் மருத்துவ பொருளாக வாங்கப் படுகிறது. சந்தையின் தேவைக்கேற்ப ஒப்பந்த சாகுபடியை மேற்கொண்டால் விற்பனையில் பிரச்னை இருக்காது என்பது என்னுடைய கருத்து.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# கோடை சாகுபடிக்கு தயாராகும் பாய் நாற்றங்கால்

திருவாரூர், ஏப்.3

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வேளாண் கோட்ட பகுதியில் சுமார் 20.000 ஏக்கரில் விவசாயிகள் கோடை சாகுபடி பணியை தொடங்கியுள்ளனர். விவசாயிகள் கடந்த தாளடி சாகுபடியில் 33,000 ஏக்கரில் தாளடி பணியை முடித்தனர்.

அதன்பிறகு தற்போது நாற்றங்காலை சீர் செய்து நிலத்தடி நீரை பயன்படுத்தி மின் மோட்டாரில் கோடை சாகுபடி படியை முன் பட்டம், பின்பட்டம் என விவசாயிகள் தொடங்கியுள்ளனர்.

முன் பட்டத்தில் விவசாய பணியை தொடங்கிய விவசாயிகள் தற்போது நாற்று பறித்து நடவு செய்து களை எடுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

சிலர் தற்போது நாற்றங்காலில் விதை விட்டும், பாய் நாற்றங்கால் அமைத்தும் நடவு பணிக்கு தயாராகி வருகின்றனர். சில இடங்களில் நடவு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# விவசாயத்தில் இயந்திர புரட்சி : நன்மையா, சுமையா?

தமிழ்நாட்டின் வேளாண்மை துறை கடந்த சில ஆண்டுகளில் மிக வேகமாக மாற்றமடைந்து வருகிறது. குறிப்பாக, இயந்திர மயமாக்கல் (Mechanization) என்பது விவசாயத்தில் ஒரு பெரிய புரட்சியாக உருவெடுத்துள்ளது.




டிராக்டர்கள், ஹார்வெஸ்டர்கள், ட்ரோன்கள் போன்ற இயந்திரங்கள் விவசாய பணிகளை எளிதாக்கியுள்ளன. ஆனால், இந்த மாற்றம் முழுமையாக நன்மையா? அல்லது விவசாயிகளுக்கு ஒரு சுமையா? என்பது விவாதிக்க வேண்டிய முக்கியமான கேள்வியாக உள்ளது.



**இயந்திரமயமாக்கலின் நன்மைகள்**

**1.வேலை வேகமும் திறனும் அதிகரிப்பு**

இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதால், நிலம் உழுதல், விதைப்பு, அறுவடை போன்ற பணிகள் குறைந்த நேரத்தில் முடிகின்றன. இதனால் விவசாயிகள் காலத்தை மிச்சப்படுத்தி, அதிக விளைச்சலை பெற முடிகிறது.

**2.தொழிலாளர் பற்றாக்குறைக்கு தீர்வு**

இன்றைய சூழலில் கிராமங்களில் தொழிலாளர்கள் குறைந்து வருகிறார்கள். இந்த நிலையில், இயந்திரங்கள் மனித உழைப்பை மாற்றி, விவசாய பணிகளை தொடர உதவுகின்றன.

**3.துல்லியமான விவசாயம்**

ட்ரோன், ஸ்மார்ட் கருவிகள் போன்றவை உரம் மற்றும் பூச்சிக் கொல்லிகளை சரியான அளவில் பயன்படுத்த உதவுகின்றன. இதனால் செலவும் குறைகிறது, விளைச்சலும் மேம்படுகிறது.

**இயந்திரமயமாக்கலின் சுமைகள்**

**1.அதிக முதலீட்டு செலவு**

டிராக்டர், ஹார்வெஸ்டர் போன்ற இயந்திரங்கள் மிகவும் விலையுயர்ந்தவை. சிறு மற்றும் குறைந்த நிலப்பரப்புள்ள விவசாயிகள் இதனை வாங்க முடியாமல் சிரமப்படுகிறார்கள்.

**2.சிறு விவசாயிகளின் சிக்கல்**

தமிழ்நாட்டில் பெரும்பாலான விவசாயிகள் சிறு நிலப்பரப்பில் விவசாயம் செய்கிறார்கள். இங்கு பெரிய இயந்திரங்களை பயன்படுத்துவது சாத்தியமில்லை.

**3.தொழிலாளர் வேலை இழப்பு**

இயந்திரங்கள் அதிகமாக பயன்படுத்தப்படுவதால், பாரம்பரிய விவசாய தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் உள்ளது.



### பராமரிப்பு சிக்கல்கள்

இயந்திரங்கள் பழுதாகினால் அதை சரி செய்வது, பராமரிப்பது போன்றவை கூடுதல் செலவையும் சிரமத்தையும் உருவாக்குகிறது.

### சமநிலை அணுகுமுறை தேவையா?

இயந்திரமயமாக்கல் முழுமையாக தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் அது எல்லா விவசாயிகளுக்கும் சமமாக பயன் தர வேண்டுமெனில் சில மாற்றங்கள் அவசியம் :

- அரசு மானியங்கள் அதிகரிக்க வேண்டும்
- சிறு விவசாயிகளுக்கு ஏற்ற சிறிய இயந்திரங்கள் அறிமுகப் படுத்த வேண்டும்
- வாடகை இயந்திர மையங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும்
- விவசாயிகளுக்கு பயிற்சி வழங்க வேண்டும்

### முடிவுரை

விவசாயத்தில் இயந்திர புரட்சி ஒரு இருபுறக் கூர்மையான வாளைப் போன்றது. அது ஒரு பக்கம் விவசாயத்தை மேம்படுத்து கிறது, மற்றொரு பக்கம் புதிய சவால்களையும் உருவாக்குகிறது. எனவே, இயந்திரம் நன்மையா? சுமையா? என்ற கேள்விக்கு நேரடி பதில் இல்லை.

சரியான திட்டமிடல் மற்றும் சமநிலை அணுகுமுறையுடன் பயன்படுத்தினால், அது விவசாயியின் வளர்ச்சிக்கு பெரிய ஆதாரமாக மாறும்.



கட்டுரை ஆசிரியர் : ***Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@ gmail.com.***

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நவீன வேளாண்மையில் பனீர் தயாரிப்பு

பனீர் செய்வது எப்படி, அதுவும் தரமாக செய்வது எப்படி? பனீர் என்பது இந்திய உணவு வகைகள பரவலாக பயன்படுத்தப்படும் ஒரு புதிய பாலாடைக் கட்டி (Fresh Cheese) ஆகும். பனீர் இந்தியாவில் சில நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதன் தோற்றத்தை பாரசீக அல்லது மத்திய ஆசிய கலாச் சாரத்துடன் தொடர்புபடுத்துகின்றனர். ஏனெனில் பனுர் என்ற சொல் பாரசீக மொழியில் பாலாடைக்கட்டி என்று பொருள்படும்.

தமிழ்நாட்டில் பால் மதிப்பு கூட்டலில் பனீர் தயாரிப்பு ஒரு முக்கிய இடத்தில் உள்ளது. பாலும் ஏதேனும் ஒரு அமிலப்பொருள் இருந்தால் சில படிகளில் பனீர் தயார் செய்யலாம். முழு கொழுப்பு நிறைந்த பாலை நடுத்தர தீயில் கொதிக்கவிட வேண்டும். பால் கொதிக்கும்போது பால் பாத்திரத்தில் ஒட்டாமல் பார்த்துக்கொள்ள அடிக்கடி கிளறிவிட வேண்டும். பால் நன்கு கொதித்தவுடன் சரியான தேவையான வெப்பநிலை வந்ததும் தீயைக் குறைத்து எலுமிச்சம் சாறு அல்லது வினிகரை மெதுவாக சேர்த்துக் கிளறினால் சில நிமிடங்களில் பால் திரிந்து திடப்பகுதி தனியே பிரியும்.

தீயை அனைத்து ஆறவிட்டு மெல்லிய துணி அல்லது சல்லடை பயன்படுத்தி திரிந்த பனீரை வடிகட்டி சேகரிக்க வேண்டும். இதிலுள்ள நீர் வடியும் வரை வைத்த பின், பின்னர் இதற்கான அச்சில் ஊற்றி தேவையான அழுத்தம், தேவைப் படும் நேரம் வரை கொடுக்க வேண்டும். பின்னர் தேவையான அளவு வெட்டி பேக் செய்யலாம். எலுமிச்சை சாறு பயன் படுத்தினால் 2-3 முறை கழுவி எலுமிச்சை சுவை நீங்கச் செய்ய வேண்டும்.

இதில் வெப்பநிலை, அழுத்தம் கொடுக்க வேண்டிய நேரம், அழுத்தத்தின் அளவு போன்றவற்றை அதீத கவனத்துடன் சரியானபடி மேற்கொண்டால் மட்டுமே தரமான, மிருதுவான பனீர் செய்ய இயலும். இதற்கு அனுபவ பாடம் மட்டுமே உதவும். பொதுவாக சந்தையில் 200 கிராம் 500 கிராம் 1000 கிராம் எடை உள்ள பேக்கிங்கள் விற்பனை ஆகின்றது.

பனீரை பாலிதீன் பைகளில் இட்டு வெற்றிடம் உண்டாக்கி கொடுக்கும் கருவியில் வைத்து பைகளினுள் இருக்கும் காற்று முழுவதும் நீக்கிய பின் ஒட்டப்படுவதால் பனீரின் வாழ்நாள் அறை வெப்பத்தில் ஒரு நாளும் குளிர்பதன பெட்டியில் 21 நாட்களும் கெட்டுப் போகாமல் வைத்திருக்க முடிகின்றது.

பனீர் ஒரு புரதச்சத்து நிறைந்த உணவுப் பொருளாகும். பாலில் உள்ள முக்கிய சத்துக்கள் இதில் உள்ளன. உடல் திசுக்களின் வளர்ச்சி மற்றும் பழுதுபார்ப்புக்கு உதவும் புரதம் 100 கிராம் பனீரில் 18 முதல் 20 கிராம் வரை உள்ளது. எலும்புகள் மற்றும் பற்களின் வலிமைக்கு அவசியமான கால்சியம் 100 கிராம் பனீரில் 200 முதல் 300 மில்லி கிராம் அளவில் உள்ளது. உடலுக்கு ஆற்றலைக் கொடுக்கக்கூடிய கொழுப்பு 100 கிராமில் 20 முதல் 25 கிராம் உள்ளது. செல் செயல்பாட்டுக்க எலும்பு ஆரோக்கியத்திற்கான பரஸ்பரஸ் உள்ளது. அத்துடன் வைட்டமின் A, D மற்றும் B காம்ப்ளக்ஸ், B 12 உள்ளன. இவை நோய் எதிர்ப்பு மற்றும் நரம்பு மண்டலத்திற்கு உதவுகிறது. உடலின் வளர்சிதை மாற்றத்திற்கு உதவும் மெக்னீசியம் மற்றும் துத்தநாகம் உள்ளது. பனீரில் கார்போஹைட்ரேட் எனும் மாவுச்சத்து மிகக் குறைவு என்பதால் குறைந்த கார்ப் உணவு முறை, பேலியோ உணவு முறை போன்ற உணவு முறையை பின்பற்றபவர்களுக்கு ஏற்றதாக உள்ளது. இந்த சத்துக்களின் அளவு பாலின் தரம், பனீர் தயாரிக்கும் முறையைப் பொறுத்து மாறுபடலாம்.

மென்மையான பனீர் (Soft Paneer) மிகவும் மென்மையான, கிரீமி அமைப்பு கொண்டது. இதனை அழுத்தாமல், வடிகட்டிய உடனே பயன்படுத்துவர், ரசமலாய், சந்தோஷ் போன்ற இனிப்பு வகைகள், பனீர் பட்டர் மசாலா போன்ற மென்மையான கிரேவி களில், ஸ்முத்திகளில் பயன்படுத்தலாம். கனமான பொருளால் அழுத்தி உறுதியான, கட்டியான அமைப்பு கொண்டது. உறுதி யான பனீர் (Firm Paneer) இது பொதுவாக கடைகளில் கிடைக்கும் வகை. வடிகட்டிய பனீரை 30 நிமிடம் முதல் 1 மணி நேரம் வரை அழுத்தி தயாரிக்கப்படுகின்றது. பனீர், கடாய் பனீர், பனீர் பகோடா, சாலட்டுகள் போன்றவை சமைக்க பயன் படுத்தலாம்.

தொடர்புக்கு : ***பட்டேல், செல் : 90032 13576 மற்றும் T.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலைப் பேட்டை.***

# இளம் ஆட்டுக்குட்டிகளை இறப்பிலிருந்து காப்பதற்கான எளிய பண்ணைப் பராமரிப்பு முறைகள்

இன்றைய ஆட்டுக் குட்டிகளே வளர்ந்து பின்னாளில் நமக்கு அதிக வருவாய் ஈட்டித் தருவதிலும் நமது பண்ணைக்கு வலிமையான சந்ததிகளை உருவாக்குவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஆகவே இளம் குட்டிகளைக் கண்ணும் கருத்துமாகப் பண்ணையாளர்கள் பேணிப் பாதுகாக்க வேண்டும். சினை ஆடுகள் குட்டி போடும் நாள் நெருங்கும் பொழுது, மேய்ச்சலுக்கு



அனுப்பாமல் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யப்பட்ட சுத்தமான தனி அறையில் அடைத்து வைக்க வேண்டும். குட்டி ஈனும் பொழுது சினையாட்டிற்குச் சிரமம் ஏற்பட்டால் உடனடியாகக் கால்நடை மருத்துவரின் ஆலோசனைகளைப் பெற்று தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**சுவாசப் பராமரிப்பு**

குட்டிகள் பிறந்தவுடன் வால் மற்றும் நாசி துவாரத்தில் காணப்படும் பிசுபிசுப்பான திரவத்தைச் சுத்தமான துணி கொண்டு துடைத்து விட்டு நன்கு சுவாசிக்க வழி வகை செய்ய வேண்டும். பின்பு தாயானது குட்டியை நாவால் சுத்தம் செய்ய அனுமதிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் தாய் தன் குட்டியை அடையாளம் காணவும், தாய் சேய் பற்றுதல் ஏற்பட ஏதுவாகிறது. சரியாக மூச்சுவிடாத குட்டிகளை அதன் பின் கால்களைப் பிடித்து உடலை சாய்த்து வைத்து தலை கீழே இருக்குமாறு வைத்து மூச்சு விடும் வரை இலேசாக உதற வேண்டும். மார்பை அழுத்தி விடுவதன் மூலமும் மூச்சு விட ஆரம்பிக்கும்.

**தொப்புள் கொடியை வெட்டுதல்**

குட்டிகள் பிறந்தவுடன் தொப்புள் கொடியை 2 செ.மீ அளவு நீளம் விட்டு மெல்லிய நூலினால் கட்டிய பிறகு அதற்குக் கீழே கத்திரிக்கோலால் கத்தரித்தபின் 'டிங்சர் அயோடின்' மருந்து கொண்டு தடவ வேண்டும். இதனால் தொப்புளில் சீழ்க்கட்டிக் கொள்வது, இரண ஜன்னி நோய் வருவது போன்றவை தடுக்கப்படுகிறது.

**குளிர்காலப் பராமரிப்பு**

மழைக்காலங்களிலும், குளிர் மற்றும் பனிக்காலங்களிலும் பிறக்கும் குட்டிகள் அதிக அளவில் இறக்க வாய்ப்புள்ளது. இவற்றை தவிர்க்க கொட்டகைகளில் தடுப்புகள் அமைத்து காய்ந்த புல், வைக்கோல், உலர்ந்த பொட்டுகளைப் பரப்பி வெது வெதுப்பாக இருக்கச் செய்வது அவசியம். மேலும் மின் விளக்கு களை எரிய விடுவதன் மூலமும் வெப்பத்தை அதிகரிக்கலாம்.

**சீம்பால் கொடுத்தல்**

குட்டிகள் பிறந்தவுடன் 30 நிமிடத்திற்குள் சீம்பாலை கொடுக்க வேண்டும். சீம்பாலில் நோய் எதிர்ப்பு சக்திகளும், அதிக சத்துக் களும் உள்ளன. எனவே இது இளம் குட்டிகளை நோயிலிருந்து

காப்பாற்றும். குட்டிகளுக்கு பாலை முதல் வாரத்தில் 3 வேளையும் பிறகு இரண்டு வேளையும் கொடுக்க வேண்டும். இரண்டு அல்லது மூன்று குட்டிகள் ஈனும் தாயிடம் அதிகமாக பால் இருக்காது. எனவே அதிகமாக பால் கொடுக்கும் தாய் ஆடுகளிடமிருந்து அதன் குட்டிகள் பால் குடிப்பதற்கு முன்பாகவே பாலைக் கறந்து மற்ற ஆட்டுக் குட்டிகளுக்குக் கொடுக்கலாம்.

இல்லையென்றால் பசும்பாலுடன் சம அளவு தண்ணீர் சேர்த்து நன்றாகக் காய்ச்சி பாலேடு நீக்கி விட்டு ஆறவைத்து பால் புட்டி மூலம் குட்டிகளுக்கு கொடுக்கலாம். முதல் மாதத்தில் உடல் எடையில் ஆறில் ஒரு பங்கு, இரண்டாவது மாதத்தில் பத்தில் ஒரு பங்கு என்ற அளவில் குட்டிகளுக்கு பால் கொடுக்க வேண்டும்.

குட்டிகள் பிறந்தவுடன் தாயிடம் பால்குடிக்கச் செல்லும் பொழுது சாணம், சிறுநீர் கலந்த மடியில் பால்குடிப்பதனால் நுண்ணுயிர்க் கிருமிகள் குட்டிகளின் வயிற்றுக்குள் சென்று குட்டிகளுக்கு வயிற்றுப்போக்கை ஏற்படுத்தி குட்டிகள் இறக்க வாய்ப்புள்ளது. எனவே குட்டிகளை அதன் தாயிடம் பால்குடிக்க விடும் முன்பு தாய் ஆட்டின் பிறப்புறுப்பு மற்றும் மடியை ’பொட்டாசியம் பெர்மாங்கனேட்’ மருந்தை தண்ணீரில் கலந்து நன்றாக கழுவி விட வேண்டும்.

**தீவனமளித்தல்**

குட்டிகளுக்குப் பிறந்த 10ம் நாளிலிருந்து சிறிது அடர் தீவனம், பயிறு வகைப் புற்களைத் தீவனமாகக் கொடுத்துப் பழக்கப்படுத்த வேண்டும். 4 முதல் 5 வார வயதில் நாளொன்றுக்கு 50 கிராம் வரை அடர்தீவனம் அளிக்கலாம். 3 முதல் 6 மாத வயதில் கூடுதலாக 1 கிலோ பசுந்தீவனமும், 100 கிராம் அடர் தீவனமும் அளிக்க வேண்டும். குட்டிகளுக்கு தேவையான அளவு சுத்தமான தண்ணீர் கொடுக்க வேண்டும்.

எடை பார்த்தல்

வளரும் பருவத்தில் குட்டிகளின் எடையைத் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமாகும். இது தீவன அளவைக் கட்டுப்படுத்திக் கொடுக்கவும், நோய் வருமுன் கண்டறியவும் உதவும். பண்ணையாளர்கள் மாதம் ஒரு முறை எடை பார்த்து வளர்ச்சியைக் கவனித்து வருவது அவசியம். மார்புச் சுற்றளவிற்கும், உடல் எடைக்கும் மிக நெருங்கிய தொடர்புள்ளது.

இந்த அடிப்படையில் மார்புச் சுற்றளவு அதிகம் உள்ள ஆடுகள், அதிக எடையுடன் இருக்கும். முக்கியமாக 1 கிலோ உடல் எடை கூட எவ்வளவு தீவனம் செலவாகிறது என்பதைத் தெரிந்து கொள்வது நல்லது. முறையான பராமரிப்பு செய்தும் மூன்று மாதங்கள் வரை குட்டிகளின் எடை அதிகரிக்கவில்லை என்றால் பண்ணையிலிருந்து அந்தக் குட்டிகளை நீக்கி விடுவது நல்லது.

**கொம்பு நீக்கம்**

நீளமாக வளரும் கொம்புகளால் மந்தையில் உள்ள மற்ற ஆடுகளுக்குக் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. மின்சார உபகரணம் அல்லது காஸ்டிக் சோடா கொண்டு கொம்பு நீக்கம் செய்யலாம். குட்டிகளுக்கு 3 முதல் 6 நாட்களில் கொம்பு நீக்கம் செய்யலாம். இதனால் மந்தையிலுள்ள ஆடுகள் ஒரே சீரான தோற்றம் பெற்றிருக்கும்.

**ஆண்மை நீக்கம் செய்தல்**

இனவிருத்திக்கு அல்லாமல் இறைச்சிக்காக பயன்படுத்தப் படும் கிடாக்களை 2 மாத வயதில் ஆண்மை நீக்கம் செய்யலாம். ஆண்மை நீக்கம் செய்வதன் மூலம் இறைச்சி உற்பத்தி அதிகரிக்கும். மேலும் ஆண்மை நீக்கம் செய்யப்பட்ட கிடாக் களைக் கையாளுவது எளிது.

**குளம்பு நீக்கம் செய்தல்**

கொட்டில் முறையிலும் பரண் மேலும் வெள்ளாடுகளை வளர்க்கும் பொழுது குளம்புகள் நீளமாக வளர்ந்து விடுவதால் ஆடுகள் நொண்டிக் கொண்டே இருக்கும். ஆகவே, அதிகமாக வளர்ந்த குளம்புகளை வெட்டி நீக்க வேண்டும்.

**பால் மறக்கடித்தல்**

மூன்று மாத வயதாகும் பொழுது குட்டிகளை பால மறக்கச் செய்து தாயிடமிருந்து பிரிக்கலாம். குட்டிகளை 3 மாதத்திற்குப் பிறகும் நீண்ட நாட்கள் தாயிடம் பால் குடிக்க அனுமதித்தால் தாய் ஆடு, மீண்டும் சினைப்பிடிப்பதிலும், குட்டிகள் ஈனுவதிலும் தாமதம் ஏற்படும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

### நோய்ப் பராமரிப்பு

குடற்புழு நீக்கம் முதல் வாரத்திலும் பிறகு முதல் ஆறு மாதத்திற்கு மாதம் ஒரு முறையும் ஆறு மாதத்திற்கு பிறகு 3 மாதங்களுக்கு ஒரு முறையும் கால்நடை மருத்துவரின் உதவி உடன் குடற்புழு நீக்க மருந்து கொடுக்க வேண்டும். நோய் தடுப்பூசிகளை தகுந்த சமயத்தில் கால்நடை மருத்துவர் உதவியுடன் ஆட்டுக் குட்டிகளுக்குப் போட வேண்டும். குட்டிகள் ஏதும் நோய் வாய்ப்பட்டிருந்தால் பாதிக்கப்பட்ட குட்டிகளை தனியாக பிரித்து வைத்து உடனடியாக கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி மருத்துவம் செய்ய வேண்டும்.

தகவல் : ***டாக்டர். இரா.உமாராணி, பேராசிரியர், கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம். திருப்பரங் குன்றம். மதுரை 625 005.***

# கோடையில் தென்னந்தட்டிக்கு தேவை அதிகரிப்பு

திண்டுக்கல், ஏப்.3

திண்டுக்கல் மாவட்டம், பழநி மேற்கு பகுதி கிராமங்களான ஆண்டிபட்டி, குதிரையாறு, பெருமாள்புதூர், பெரியம்மாபட்டி பகுதிகளில் தென்னந்தடுப்பு தயாரிப்பு முக்கிய குடிசைத் தொழிலாக உள்ளது. இங்கு தயாரிக்கப்படும் தென்னந்தட்டிகள், தமிழகத்தின் வெப்பமான பகுதிகளில் வீட்டின் மேற்கூரை அமைக்கவும், குடிசை அமைக்கவும் விற்பனைக்கு அனுப்பப் படுகிறது. மாநிலம் முழுவதும் தென்னந்தடுக்குகளின் தேவை அதிகரித்துள்ளதால் விலையும் அதிகரித்துள்ளது.

இதுகுறித்து தென்னந்தட்டிவேயும் தொழிலாளர்கள் கூறுகை யில், கோடை வெயிலின் காரணமாக அதிக வெப்பம் நிலவும் தஞ்சை, சீர்காழி, சிதம்பரம், பெரம்பலூர், திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் தென்னந்தடுக்குகள் அதிகளவு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. கோழிப் பண்ணைகளுக்கும் தேவை அதிகரித்துள்ளது. இதனால் தென்னந்தட்டிகளின் விலையும் உயர்ந்து வருகிறது என்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333